| O.S.No. 208/2024 | DW1: திரு. தினேஷ்குமார்<br>த/பெ. திரு. சண்முகம் | 14-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. இந்த பாகப்பிரிவினை வழக்கினை எனது பாட்டி போட்டுள்ளார். இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதி ஆவேன். 1ம் பிரதிவாதி எனது தாயார். 3, 4 பிரதிவாதிகள் என் சகோதர சகோதரிகள். தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தாவின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதாகும். என் கொல்லுதாத்தாவிற்கு மொத்தம் 4 பிள்ளைகள். அவர்கள் பெயர் பெருமாள் பிள்ளை, எல்லப்பிள்ளை, செல்லப்பிள்ளை, சாமிநாதபிள்ளை ஆகும். தாவா சொத்துக்களை மேற்படி 4 பேரும் பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை முதலில் பெருமாள் பிள்ளையும், அவருக்கு பிறகு செல்லப்பிள்ளையும் அவருக்கு பிறகு சாமிநாதப்பிள்ளையும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். செல்லப்பிள்ளை இறந்தவுடன் அவரது சொத்தை செல்லப்பிள்ளையின் வாரிசுகள் அனுபவித்து வந்தார்கள். செல்லப்பிள்ளை 2003ம் ஆண்டு இறந்தார். எனது தாத்தா செல்லப்பிள்ளையின் இறப்பு சான்றிதழ் பி.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளேன்.

2. பி.சா.ஆ.1ல் செல்லப்பிள்ளையின் வாரிசுகள் என்று தானம்மாள், சண்முகம் மற்றும் சந்தோஷ் குமார் ஆகியோர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்லப்பிள்ளைக்கு மேற்படி மூவர் மட்டும் தான் வாரிசு. வேறு வாரிசுகள் இல்லை. எனது தந்தை சண்முகம் 12.10.2022 ல் இறந்தார். எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் பி.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையின் வாரிசுகள் நாங்கள் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் தந்தையின் வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை.

3. 1ம் வாதி இறந்த சண்முகத்தின் வாரிசு சான்றிதழை கேட்டபோது நாங்கள் வாங்கிவிட்டதாக தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை வேறுஒருவருடன் தொடர்வு வைத்திருந்தார் என்றாலும், அவருக்கு குழந்தைகள் உள்ளது என்றாலும், அதனால் தான் நாங்கள் எங்கள் தந்தையின் வாரிசு சான்றிதழை வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து எனது தாத்தாவுடன் பிறந்த 4 சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து. தாவா 2வது அயிட்ட சொத்து சாமிநாதப்பிள்ளைக்கு தனிமையில் கிரையம் பெற்ற சொத்தாகும். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் அந்த சமயத்தில் இல்லை. தாவா சொத்து அல்லாத இதர சொத்துக்களான நிலத்தினை குடும்ப செலவிற்காக விற்பனை செய்யப்பட்டது என்றால் இல்லை.

4. எனது பிரமாணவாக்குமூலத்தில் குடும்ப சூழ்நிலை காரணமாக வேறு வருமானம் எதுவும் இல்லாததால் எனது தந்தை குடும்ப சொத்துக்களை விற்பனை செய்ததாக எனது பிரமானவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தினை தானம்மாள், சந்தோஷ்குமார், சண்முகம் ஆகிய மூவர் கையெழுத்துப்போட்டு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி என் தந்தை, மூவரும் சேர்ந்து 2008ம் ஆண்டு வீட்டு மனையை விற்பனை செய்தார்களா என்றால் என் தந்தை எந்த சொத்தையும் விற்பனை செய்யவில்லை. பி.சா.ஆ.3 ஆவணமானது போதிய வருமானம் இல்லை என்பதால் என் தந்தை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தினை விற்பனை செய்து தான் எனது தந்தை மூதாதையர் சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என்

தந்தை 2008ம் ஆண்டு புரிசை கிராமத்தில் தனியாக பால் வியாபாரம் செய்தார்.

5. என் தந்தை மேற்படி காலக்கட்டத்தில் பால் வியாபாரத்தில் Assistant ஆக கூலிக்கு வேலை செய்தார் என்றாலும், பெருமாள் தான் அவருக்கு மாத மாதம் கூறி கொடுப்பார் என்றாலும் சரியல்ல. என் தந்தைக்கு போதிய வருமாணம் இல்லை என்பதால் என் தந்தை பாண்டிச்சேரி ஆரியபவன் ஹோட்டலில் சர்வராக வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். என் தந்தை பி.சா.ஆ.3 ஆவணத்தின் படி 4ல் 3 பங்கினை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மீதி பாகம் செல்லப்பிள்ளைக்கு பாத்தியமாகும். எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் 1440 சதுரடி கிரையம் பெற்றார்.

6. பிரமாணவாக்குமூலத்தில் எனது தாத்தாவிற்கு பிறந்து 20க்கு 60 அடியினை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1440 சதுரடி முழுவதும் வீடு கட்டவில்லை. அந்த சொத்து தாவா 1 வது அயிட்ட சொத்தாகும். 2வது அயிட்ட சொத்தினை எனது தந்தை சாமிநாதபிள்ளையிடமிருந்து வாங்கினார். சாமிநாதபிள்ளைக்கு அவரது தந்தையான அன்னப்பிள்ளையிடமிருந்து பாகம் வந்த சொத்தை தவிர வேறு எந்தச்சொத்தும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.4 கூட்டுப்பட்டாவில் என் தந்தை வாங்கி விஸ்தீரணத்தைவிட கூடுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவான பி.சா.ஆ.4 ல் எனது தந்தை வாங்கிய அளவுகள் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை கூட்டுக்குடும்பமாக இருந்த போது பி.சா.ஆ.3ல் கண்டுள்ள சொத்தினை வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல.

கூட்டுக்குடும்பத்தில் செல்லப்பிள்ளைக்கு சொந்தமான சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை. செல்லப்பிள்ளைக்கு எனது தந்தை தான் மூத்த ஆண் மகன் ஆவார். பொதுவாக சொத்து வாங்குவது என்றால் குடும்பத்தில் மூத்த மகன் பெயரில் சொத்து வாங்குவார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது தம்பி சென்னையில் வேலை செய்கிறார்.

7. பி.சா.ஆ.3 கிரையப்பத்திரப்படி வாங்கிய சொத்து தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும், அவ்வாறு தனிப்பட்ட முறையில் வாங்கியிருந்தால் கூட்டுக்குடும்ப சொத்தின் நான்கெல்லைகள் வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றாலும், எங்களது தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தினை செல்லப்பிள்ளையின் பாகத்தினை சேர்த்து விற்க முடியுமா என்றால் முடியாது. அவ்வாறு விற்றிருந்தால் அது தவறு. எனது தந்தை கிரையம் பெற்ற செல்லப்பிள்ளை சொத்தை தவிர்த்து 4ல் 3 பங்கு என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தில் தான் வீடு உள்ளது. சாமிநாத பிள்ளைக்கு தாவா சொத்தினை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. பி.சா.ஆ.3ஐ தவிர்த்து சாமிநாதபிள்ளைக்கு வேறுஎதுவும் சொத்து உள்ளதா என்றால் வேறு எதுவும் இல்லை. தாவா சொத்தில் வாதிகளுக்கு 3ல் 1 பாகம் உரிமையுள்ளது என்றாலும், பிரதிவாதிகளுக்கும் 3ல் 1 பாகம் உரிமையுள்ளது என்றாலும் சரியல்ல. நாங்கள் வீடு கட்டும்போது வாதிகளுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 1வது

அயிட்ட சொத்தில் உள்ள வீடு கூட்டுக்குடும்பத்தில் உள்ள வீடு என்றாலும் தனிப்பட்ட முறையில் தன் தந்தை கட்டவில்லை என்றாலும் சரியல்ல. செல்லப்பிள்ளைக்கு உண்டான பாகத்தில் வாதிகளுக்கு 3ல் 1 பாகம் உரிமையுள்ளது என சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு தாவப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என் தந்தை முதலில் ஹோட்டலில் சர்வராக வேலை செய்து பின்னர் மேனேஜராக வேலை செய்தார். என் தந்தை லீசுக்கு எடுத்து ஹோட்டலை நடத்தியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.14 19:22:50 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**